**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**
**மேட்டுர்.**
**OS.No.** 199/2020
**வழக்கு சாட்சி PW.1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | கணவர் பெயர் | : ------ |
| தகப்பனார் பெயர் | பழனிசாமி | வயது | : 46 |
| கிராமம் | உப்புபள்ளம் | நாள் | : 30.07.2025 |
| தாலுகா | மேட்டுர் | | |
| மாவட்டம் | சேலம் | | |

**முதல் விசாரணை :**

நான் இவ்வழக்கில் 3ம் வாதி ஆவேன். நான் இன்று தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவையாகும். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்கிறேன்.

1. 1ம் வாதி பெயரிலுள்ள சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 3) அசல் **வா.சா.ஆ.1** ஆகும்.

2. 2ம் வாதி பெயரிலுள்ள சொத்து வரி ரசீதுகள் (எண்ணிக்கை 2) அசல் **வா.சா.ஆ.2** ஆகும்.

3. வாதிகளாகிய எங்கள் பெயரிலுள்ள மின் கட்டண ரசீதுகள் (எண்ணிக்கை 37) அசல் **வா.சா.ஆ.3** ஆகும்.

4. 2ம் வாதியின் மனைவி வனிதா பெயருக்கு மேச்சேரி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் வழங்கிய உத்தரவு அசல் **வா.சா.ஆ.4** ஆகும்.

5. 2ம் வாதியின் தொகுப்பு வீடு புகைப்படம் அசல் **வா.சா.ஆ.5** ஆகும்.

6. 1ம் வாதியின் குடும்ப அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.6** ஆகும்.

7. 1ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.7** ஆகும்.

8. 2ம் வாதியின் குடும்ப அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.8** ஆகும்.

9. 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.9** ஆகும்.

10. என்னுடைய குடும்ப அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகும்.

11. என்னுடைய ஆதார் அட்டை அசலுடன் ஒப்பிடப்பட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும்.

12. 06.02.2025 ம் தேதி துணை இயக்குநர் ஆட்டின திரவவிந்து உற்பத்தி நிலையம் மேச்சேரி அவர்கள் 2 ம் வாதிக்கு வழங்கிய அறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.12** ஆகும்.

13. 15.02.2025 ம் தேதியன்று 2 ம் வாதி அனுப்பிய ஆட்சேபனை மனு கை நகல் மற்றும் தபால் ரசீது அசல் **வா.சா.ஆ.13** ஆகும்.

14. 06.02.2025 ம் தேதி துணை இயக்குநர் ஆட்டின திரவவிந்து உற்பத்தி நிலையம் மேச்சேரி அவர் எனக்கு வழங்கிய அறிவிப்பு சார்வு நகல் **வா.சா.ஆ.14** ஆகும்.

15. 15.02.2025 ம் தேதியன்று நான் அனுப்பிய ஆட்சேபனை மனு கை நகல் மற்றும் தபால் ரசீது அசல் **வா.சா.ஆ.15** ஆகும்.

தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரணைக்காக வழக்கு 04.08.2025 ம் தேதி ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.